# ஹஜ் & உம்ரா பற்றிய விளக்கம்

ஒரு உம்ராச் செய்துவிட்டு மற்றொரு உம்ராச் செய்தால் அவ்விரண்டிற்கிடையே உள்ள பாவங்கள் மன்னிக்கப் படுகின்றன. தூய்மையான முறையில் செய்யப்படுகிற ஹஜ்ஜிற்கு கூலி சுவர்க்கமே! புகாரி அபூஹீரைரா(ரலி)

ஹஜ், உம்ராவை தொடர்ந்து செய்யுங்கள். நிச்சயமாக இவ்விரண்டும் - இரும்பு, வெள்ளி, தங்கம் ஆகியவற்றின் அழுக்கை துருத்தி அகற்றுவது போல – ஏழ்மையையும் பாவங்களையும் அகற்றிவிடும். தூய்மையான முறையில் செய்யப்படுகிற ஹஜ்ஜிற்கு கூலி சுவர்க்கமே! அஹ்மத், அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(ரலி)

**உம்ராவின் முதன்மைக் கடமைகள் 3**

1. உம்ராச் செய்வதாக நிய்யத்தை வாயால் சொல்லுதல் 2. கஅபாவை வலம் வருதல் 3. ஸஃபா, மர்வாவிற்கிடையே ஓடுதல்.

இம்மூன்றில் ஒன்றை ஒருவர் விட்டு விட்டால் அவரின் உம்ரா நிறைவேறாது. அதாவது அவர் மீண்டும் ஒருமுறை உம்ராச் செய்தாக வேண்டும்.

**உம்ராவின் இரண்டாம் நிலைக் கடமைகள் 2**

1. இஹ்ராமை அதற்குரிய எல்லையிலேயே செய்துவிடுவது. அதாவது உம்ராச் செய்வதாக நிய்யத்தை வாயால் சொல்வதை எல்லையில் செய்துவிடுவது 2. உம்ரா முடிந்ததும் தலை முடியை மழிப்பது அல்லது கத்திரிப்பது. இவ்விரண்டில் ஒன்றை விட்டுவிட்டால் ஒரு ஆட்டை அறுத்து குர்பான் கொடுக்க வேண்டும்.

**உம்ராவில் விரும்பத்தக்க ஒழுக்கங்கள்**

எல்லையை அடைந்ததும் நகங்கள் வெட்டுவது, மறைவிட, அக்குள் முடிகளைக் களைவது, குளித்து உடலில் நறுமணம் பூசிக் கொள்வது (இஹ்ராம் ஆடைகளில் பூசக்கூடாது), மேலாடை கீழாடை என இரண்டு ஆடைகளை உடுத்திக் கொள்வது, அவ்விரண்டும் வெள்ளை ஆடையாக இருப்பது, வாகனத்தில் ஏறி அமர்ந்த பின்னர் உம்ராச் செய்வதாக நிய்யத்தை வாயால் சொல்லுதல். பின்னர் தல்பியாவைக் கூறிக் கொண்டிருக்க வேண்டும்.

தல்பியா: **லப்பைக்கல்லாஹும்ம லைப்பைக்க, லைப்பைக்க லா ஃஷரீக்க லக லைப்பைக்க இன்னல் ஹம்த வன் நிஃமத்த லக வல்முல்க் லா ஃஷரீக்க லக்**. இந்த தல்பியாவை கஅபத்துல்லாஹ்வை அடையும் வரை கூறிக்கொண்டே இருக்க வேண்டும். கஅபத்துல்லாஹ்வை அடைந்ததும் பள்ளிக்குள் நுழையும்போது வலது காலை முற்படுத்தி “**அல்லாஹும்மஃப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக்க**” - இறைவா உனது அருள் வாயல்களை எனக்கு திறந்தருள்வாயாக!- எனக் கூறி தவாஃபைத் தொடங்க வேண்டும்.

**தவாஃப்-வலம் வருதல்**

**7** தடவைகள் கஅபாவை வலம் வரவேண்டும். ஒரு தடவை என்பது ஹஜருல் அஸ்வதிலிருந்து ஆரம்பித்து ஹஜருல் அஸ்வதை அடைவதாகும். தவாஃபை தொடங்கும் முன் வலது தோள்புஜத்தை திறந்து வைத்துக் கொள்ள வேண்டும். தொழும்போது மூடிக் கொள்ள வேண்டும். அல்லாஹுஅக்பர் என்று கூறி ஹஜ்ருல் அஸ்வதை முத்தமிட வேண்டும், முத்தமிட முடியவில்லையென்றால் கையால் தொட்டு கையை முத்தமிட்டுக் கொள்ள வேண்டும். அதற்கும் முடியவில்லையென்றால் கையால் சுட்டிக் காட்டிக் கொள்ளலாம். முதல் மூன்று சுற்றில் முடிந்தால் தொங்கோட்டமாக ஓட வேண்டும். வலம் வந்து கொண்டிருக்கும் போது இன்ன துஆ தான் ஓத வேண்டுமென்று ஹதீஸில் வரவில்லை. நமக்கு தேவையான எந்த துஆவையும் கேட்டுக் கொள்ளலாம், குர்ஆனும் ஓதிக் கொள்ளலாம். ஹஜருல் அஸ்வதிற்கும் ருக்னுல் யமானுக்குமிடையில் “**ரப்பனா ஆதினா ஃபித்துன்யா ஹஸனதன் வஃபில் ஆகிரதி ஹஸனதன் வகினா அதாபன் நார்**" எனக் கூறிக் கொள்ள வேண்டும். முடிந்தால் ஒவ்வொரு சுற்றிலும் ருகுனுல் யமானியை தடவிக் கொள்ள

வேண்டும். ஹஜருல் அஸ்வதை கடக்கும் போதெல்லாம் அல்லாஹு அக்பர் எனக் கூறிக் கொள்ள வேண்டும். **7** தடவைகள் சுற்றி முடித்து விட்டால் முடிந்தால் மகாமு இப்றாஹீமுக்கு பின்னால் இரண்டு ரக்அத்துகள் தொழ வேண்டும். முடியாவிட்டால் எங்காவது தொழுது கொள்ளலாம். தொழும் முன்பு திறந்து வைத்திருந்த இடது தோள் புஜத்தை மறைத்திட வேண்டும். முதல் ரக்அத்தில் குல்யாஅய்யுஹல் கா:ஃபிரூனையும் 2 வது ரக்அத்தில் குல்ஹுவல்லாஹ்வையும் ஓத வேண்டும். பின்னர் ஸயீச் செய்வதற்காக ஸஃபா நோக்கிச் செல்லவேண்டும்.

ஸஃபாவை நெருங்கியதும்

"إن الصفَا والْمروةَ من شعائر الله" - -**இன்னஸ் ஸஃபா வல் மர்வத மின் ஷஆயிரில்லாஹ்** எனக் கூற வேண்டும். **பொருள்:** ஸஃபாவும் மர்வாவும் அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களிலுள்ளவையாகும்

ஸஃபாவில் ஏறி கிப்லாவை முன்னோக்கி

**"لاَ إِلَه إِلا الله وحده لاَ شريك لَه لَه الْملْك ولَه الْحمد وهو علَى كُلّ شيءٍ قَدير لاَ إِلَه إِلا الله وحده أنجز وعده ونصر عبده وهزم الأَحزاب وحده**

**லாஇலாஹ இல்லல்லாஹ வஹ்தஹு லா ஷரீக்க லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு அன்ஜஸ வஃதஹு வநஸர அப்தஹு வஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹு** என **3** தடவை கூற வேண்டும்.

**பொருள்:** வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன். அவனுக்கு இணையாக எவரும் கிடையாது. ஆட்சி, அதிகாரமும் புகழும் அவனுக்குரியதே! அவன் எல்லா பொருள்களின் மீதும் சக்தி மிக்கவன், வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, வாக்கை நிறைவேற்றினான். தனது அடியாருக்கு உதவினான். எதிரிகளை அவன் மட்டுமே தோற்கடித்தான்.

இடையிடையே துஆச் செய்து கொள்ள வேண்டும். பின்னர் ஸஃபாவிலிருந்து மர்வாவிற்குச் செல்லும்போது தனக்குத் தேவையான எந்தத் துஆவையும் கேட்டுக் கொள்ளலாம், தவாஃப் போன்றே இங்கும் குறிப்பான துஆ ஏதும் இல்லை, குர்ஆனும் ஓதிக் கொள்ளலாம். மர்வாவை அடைந்துவிட்டால் ஒரு சுற்று முடிந்துவிடும். மர்வா சென்றதும் ஸஃபாவில் செய்தது போலவே செய்து கொள்ளவேண்டும். ஸஃபா மர்வாக்கிடையில் ஸயீச் செய்யும் போது இரு பச்சை லைட்டுகள் உள்ளன அவற்றிற்கிடையே முடிந்தால் தொங்கோட்டமாக ஓடிக் கொள்ள வேண்டும். திரும்ப ஸஃபாவை அடையும்போது 2 சுற்றுகள் முடிவடைந்துவிடும். இப்படியாக **7** சுற்றுகள் சுற்ற வேண்டும். 7 வது சுற்று மர்வாவுடன் முடிவடையும். முடிந்ததும் தலை முடியை மழிக்க வேண்டும் அல்லது வெட்டிக் கொள்ள வேண்டும். மழிப்பதே சிறந்தது ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் மொட்டை அடித்துக் கொள்பவர்களுக்கு கிருபை செய்வாயாக! என மூன்று முறையும் ஒரே ஒரு முறை முடி வெட்டிக் கொள்பவர்களுக்கும கிருபை செய்வாயாக! எனவும் கேட்டுள்ளார்கள்.

**கவனத்தில் கொள்ள வேண்யடிவை:-** உம்ராச் செய்வதாக நிய்யத்தை சொன்னதிலிருந்து முடி களைந்து உம்ராவை முடிக்கும் வரை நகம் நீக்குவது, முடியைப் பிடுங்குவது, வேட்டையாடுதல், தையல் ஆடைகள் அணிதல், நறுமணம் பூசுதல், நிக்காஹ் சம்பந்தமான பேச்சுகள் பேசுவது போன்றவை ஹராம் ஆகும். மனைவியுடன் உள்ளவர்கள் உடலுறவு, மன இச்சை ஏற்படும் அளவிற்குள்ள சொல், செயல்களிலிருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

தஃவாப் ஆரம்பித்து முடிக்கும் வரை ஒழுவுடன் இருக்க வேண்டும். ஒழு முறிந்துவிட்டால் மீண்டும் ஒழுச் செய்து விட்டதிலிருந்து ஆரம்பித்து நிறைவு செய்ய வேண்டும்.

## ஹஜ்ஜு பற்றிய விளக்கம்

...அதி(கஅபத்துல்லாஹ்வி)ல் தெளிவான சான்றுகளும் இப்ராஹீம் (அலை) நின்ற இடமும்;

உள்ளது. அதில் யார் நுழைகிராரோ அவர் அபயம் பெற்றவராகிவிடுவார். கஅபத்துல்லாஹ் சென்று வர சக்திபெற்றவர்கள் மீது அல்லாஹ்வுக்காக கஅபத்துல்லாஹ் சென்று ஹஜ் செய்வது கடமையாகும். **அல் குர்ஆன் 3:97.**

ஒரு உம்ரா முடித்து மறு உம்ராச் செய்வது இவ்விரண்டிற்கிடையிலுள்ளவற்றுக்குப் பரிகாரமாகும், ஏற்றுக் கொள்ளப் பட்ட ஹஜ்ஜிற்குக் கூலி சுவர்க்கமே. புகாரி, அபூஹீரைரா(ரலி)

**ஹஜ், தமத்து:ஃ, கிரான், இ:ஃப்ராத்** என மூன்று வகையான ஹஜ்ஜுகள் உள்ளன.

**ஹஜ்ஜுத் தமத்து:ஃ என்பது** ஹஜ்ஜுக்கான உம்ராவைச் செய்துவிட்டு அதைத் தொடர்ந்து ஹஜ் செய்வதற்குச் சொல்லப்படும். ஹஜ்ஜுத் தமத்து:ஃ செய்பவர் உம்ராவை முடித்துவிட்டால் ஹஜ்ஜுக்காக நிய்யத் வைக்கும் வரை இஹ்ராமினால் தடுக்கப்பட்டிருந்த அனைத்தும் அவருக்கு ஹலாலாகிவிடும். துல்ஹஜ் 8 ஆம் நாள் காலையில் அவர் தங்கியிருக்கும் இடத்தில் இருந்தே ஹஜ்ஜுக்கான நிய்யத்தை சொல்லி, இஹ்ராமின் ஆடை அணிந்து மினாவிற்குச் செல்ல வேண்டும்.

**ஹஜ்ஜுக் கிரான் என்பது** ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்துச் செய்வதாக நிய்யத்து செய்வதாகும்.

**ஹஜ்ஜுஇ:ஃப்ராத் என்பது** ஹஜ்ஜுக்கு மட்டும் நிய்யத் செய்வதாகும். இம்முறையில் ஹஜ்ஜுச் செய்பவர் குர்பான் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஹஜ்ஜுக் கிரான், இ:ஃப்ராத் முறையில் ஹஜ்ஜுச் செய்பவர்கள் மக்கா வந்ததும் தவா:ஃப் (வலம்) செய்யவேண்டும். இதற்கு தவா:ஃபுல் குதூம் (மக்கா வந்ததும் செய்யும் தவா:ஃப்) என்று கூறப்படும். தவா:ஃபுல் குதூமுக்குப் பின் ஸ:ஃயிச் செய்பவர்கள் **10** ஆம் நாள் செய்யும் தவா:ஃபுல் இ:ஃபாழாவுக்குப் பின் ஸ:ஃயிச் செய்யத் தேவையில்லை. தவா:ஃபுல் குதூமுக்குப் பின் ஸ:ஃயிச் செய்யாதவர்கள் **10** ஆம் நாள் செய்யும் தவா:ஃபுல் இ:ஃபாழாவுக்குப் பின் ஸ:ஃயி செய்தே ஆக வேண்டும்.

**8 ஆம் நாள்:** மேலே கூறப்பட்டுள்ள முறைகளில் ஹஜ் செய்பவர்கள் 8 ஆம் நாள் மினாவிற்குச் செல்லவேண்டும். அங்கு ளுஹர், அஸர், மக்ரிப், இஷா, சுப்ஹு ஆகிய தொழுகைகளைத் தொழவேண்டும். நான்கு ரக்அத்துத் தொழுகைகளை இரண்டு ரக்அத்துகளாகச் சுருக்கித் தொழவேண்டும். இவ்வாறு தான் நபி(ஸல்) அவர்கள் தொழுதுள்ளார்கள்.

**9 ஆம் நாள்:** 9 ஆம் நாள் சூரியன் உதித்த பின்னர் அர:ஃபா செல்லவேண்டும். அங்கு சென்றதும் அர:ஃபாவின் எல்லைக்குள் இருப்பதை உறுதிப் படுத்திக் கொள்ளவேண்டும். அங்கே மக்ரிப் நேரம் வரும் வரை தங்கி இருப்பது அவசியமாகும். ளுஹர் தொழுகையை அதற்குரிய நேரம் வந்ததும் இரண்டு ரக்அத்துகளாகச் சுருக்கித் தொழ வேண்டும். தொழுது முடித்ததும் மீண்டும் இகாமத் கூறி அஸருத் தொழுகையையும் இரண்டு ரக்அத்துகளாக சுருக்கித் தொழுது கொள்ள வேண்டும். இதற்கு ஜம்வு, கஸர் தொழுகை (முற்படுத்தி, சுருக்கித் தொழுதல்) என்று கூறப்படும். இப்படித் தான் நபி(ஸல்) அவர்கள் தொழுதுள்ளார்கள். நபி(ஸல்) அவர்கள் இங்கு முன், பின் சுன்னத்துகளைத் தொழவில்லை. தொழுது முடித்து விட்டு ஓர் இடத்தில் அமர்ந்து வணக்கத்தில் ஈடுபடவேண்டும். இந்நாள் மிகச் சிறப்பான நாளாகும் ஹஜ்ஜுதான் அர:ஃபா என்றும், ஹாஜிகளின் தியாகங்களைப் பார்த்து அல்லாஹ் மலக்குகளிடம் பெருமையாகக் கூறுவான் என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே ஹாஜிகள் இந்நாளில் வீணாக அங்குமிங்குமாகச் சுற்றி நேரத்தை பாழாக்கிவிடாமல் பொன்னான இந்ரேத்தில் தனக்கு, தன்னுடைய உறவினர், நண்பர்களுக்கு, உலகிலுள்ள அனைத்து முஸ்லிம்களுக்கு துஆச் செய்யவேண்டும். அதிகம் அதிகம் குர்ஆன் ஓதுவது, திக்ர் செய்வது போன்றவற்றில் ஈடுபடவேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் (தொழுகையை முடித்துவிட்டு) அர∴பாவின் மலை அடிவாரத்தில் நின்று கிப்லாவை முன்னோக்கியவர்களாக சூரியன் மறையும் வரை துஆச் செய்தார்கள் (முஸ்லிம்)

நானும் எனக்கு முன்னர் வந்த நபிமார்களும் கூறியவற்றில் மிகச் சிறந்தது. **லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்**

لاإلَهَ إلاّ اللهُ وَحْدَهُ لاشَرِيْكَ لَهُ ، لَهُ المُلْكُ، وَلَهُ الحَمْدُ، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْر ஆகும் என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். எனவே நாமும் இந்த திக்ரை அதிகம் அதிகம் கூறுவது மிகச்சிறப்பாகும். அர∴பாவின் எல்லைக்குள் தங்கியிருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம், மாறாக ஜபலுர் ரஹ்மாவிற்குச் சென்று அங்கு ஏறித்தான் துஆச் செய்யவேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. சிரமமின்றி அவ்விடத்திற்குச் செல்ல முடியுமானால் அங்கு சென்று திக்ரு, துஆச் செய்வது நல்லது, ஆனால் அங்கு செல்வதற்காக சிரமப்பட்டு நேரத்தை வீணாக்கிவிடக்கூடாது. நபி(ஸல்) அவர்கள் ஜபலுர் ரஹ்மாவின் மீது ஏறியதாக ஹதீஸ் வரவில்லை.

**குறிப்பு**: ஹாஜிகள் அர∴பா எல்லைக்குள் கட்டயாம் தங்கி இருக்கவேண்டும். அப்படித் தங்காவிட்டால் அவரது ஹஜ்ஜு ஏற்கப்படமாட்டாது. அர∴பா அன்று ஹாஜிகள் நோன்பு நோற்கக்கூடாது.

**9 ஆம் நாள்**: சூரியன் மறைந்ததும் தல்பியாக் கூறியவர்களாக அமைதியான முறையில் முஸ்தலி∴பா செல்ல வேண்டும். அங்கு சென்றதும் மக்ரிபுத் தொழவேண்டும், மக்ரிபை முடித்ததும் மீண்டும் இகாமத் கூறி இஷாவை சுருக்கி இரண்டு ரக்அத்துகளாகத் தொழ வேண்டும். முஸ்தலி∴பாவில் இன்ன இடத்தில் தங்க வேண்டும் என்று நபி(ஸல்)அவர்கள் குறிப்பிடவில்லை. முஸ்தலி∴பாவின் எல்லைக்குள் எங்கு வேண்டுமானாலும் தங்கி இருக்கலாம்.

**குறிப்பு**: நபி(ஸல்)அவர்கள் ஹஜ் செய்த நாட்களில் ∴பர்ழான தொழுகைகளின் முன், பின் சுன்னத்துக்களைத் தொழவில்லை. எனவே நாமும் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி சுன்னத்துகளைத் தொழவேண்டியதில்லை.

நோயாளிகள், பெண்கள் விரும்பினால் நடு இரவுக்குப் பின்னரே மினாவுக்குச் செல்லலாம். நபி(ஸல்)அவர்கள் அனுமதித்துள்ளார்கள்.

சுபுஹ் நேரம் வந்ததும் சுபுஹத் தொழுதுவிட்டு சூரியனின் மஞ்சள் நிறம் வரும் வரை திக்ருகள் செய்யவதும் கிப்லாவை முன்னோக்கி துஆச் செய்யவதும் சுன்னத்தாகும்.

நபி(ஸல்)அவர்கள் மஷ்அருல் ஹராம் என்னும் மலை மீது ஏறி கிப்லாவை முன்னோக்கி சூரியனின் மஞ்சள் நிறம் வரும் வரை நின்று கொண்டு துஆச் செய்தார்கள் திக்ரு செய்துள்ளார்கள். (அபூதாவூத்). மற்றொரு அறிவிப்பில் : அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்தும் அவனைப் பெருமைப்படுத்தி ஒருமைப்படுத்தியும் திக்ரு செய்துள்ளார்கள் என்றும் வந்துள்ளது.

**10 ஆம் நாள்**: சூரியன் உதயமாவதற்கு முன் முஸ்தலி∴பாவிலிருந்து புறப்பட்டு தல்பியாக் கூறியவாறு மினா வரவேண்டும்.

**10 ஆம் நாளில் செய்யவேண்டியவை:**

1. ஜம்ரதுல் அகபாவில் மட்டும் ஏழு கற்கள் எறிய வேண்டும். 2. குர்பான் கொடுப்பது 3. முடி எடுப்பது 4. தவா∴புல் இ∴பாழாச் செய்வது. இம்முறைப் பிரகாரம் வரிசையாகச் செய்வதே சுன்னத்தாகும். இவற்றில் ஒன்றை முற்படுத்தியோ அல்லது பிற்படுத்தியோ செய்துவிட்டால் குற்றமில்லை. 10 ஆம் நாள் நபி (ஸல்) அவர்களிடம் பல ஸஹாபாக்கள் வந்து வரிசையாகச் செய்யாமல் முற்படுத்திவிட்டதாகவும் பிற்படுத்தி விட்டதாகவும் கூறிய போது குற்றமில்லை என்று பதிலளித்தார்கள்.

**கல் எறிதல்:**

10 நாள் எறியும் கற்களை காலையில் சூரியன் உதித்ததிலிருந்து ளுஹர் நேரத்துக்குள் எறியவேண்டும். இந்த நேரத்திற்குள் எறிய முடியாதவர்கள் அதற்குப் பிறகு எறிந்து கொள்ள

வேண்டும். ஒரு நபித் தோழர் 10 ஆம் நாள் வந்து நபி (ஸல்)அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே! மாலையான பிறகுதான் கல் எறிந்தேன் என்றார், பரவாயில்லை என (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (புகாரி)

எறியும் கல்லின் அளவு சுண்டு விரலால் எறியுமளவிற்கு இருக்க வேண்டும். கற்களை எறியும்போது அல்லாஹ அக்பர் எனக் கூறவேண்டும். ஏழு கற்களையும் ஒரே நேரத்தில் எறிந்து விடடாமல் ஒவ்வொன்றாக எறியவேண்டும்.

சுண்டு விரலால் எறியுமளவிற்குள்ள ஏழு கற்களை நபி(ஸல்) அவர்கள் எறிந்தார்கள். கற்களை எறியும்போது அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள் என ஜாபிர்(ரலி) கூறுகிறார்கள். (அபூதாவூத்)

கல் எறிய முடியாத அளவிற்கு நோயாளியாகவோ பலமில்லாதவராகவோ இருந்தால் அவர்களுக்குப் பகரமாக வேறு ஒருவர் எறிந்து கொள்ளலாம். அப்படி எறியக்கூடியவரும் ஹஜ்ஜுச் செய்பவராக இருக்க வேண்டும்.

**குர்பான்:**

தமத்துஃ, கிரான் பிரகாரம் ஹஜ்ஜுச் செய்பவர்கள் கல் எறிந்த பிறகு ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய பிராணிகளை அல்லாஹ்வுக்காக அறுத்துப் பலியிட வேண்டும். அதாவது ஒட்டகம் அல்லது மாடாக இருந்தால் ஏழு நபர்கள் கூட்டாகக் கொடுத்துக் கொள்ளலாம். ஆடாக இருந்தால் ஒருவருக்கு ஒரு ஆடு போதும்.

இஃப்ராத் முறையில் ஹஜ்ஜுச் செயய்பவர்கள் குர்பான் கொடுக்க வேண்டியதில்லை. குர்பானியை மினாவிலோ அல்லது மக்காவின் எல்லைக்குள்ளோ அறுத்துக்கொள்ளலாம். ஹரம் எல்லைக்கு வெளியில் அறுத்தல் கூடாது.

குர்பான் கொடுப்பவர்கள் அவ்விறைச்சியை தாங்களும் உண்ணலாம் பிறருக்கு உண்ணக் கொடுக்கலாம், சேமித்தும் வைத்துக் கொள்ளலாம்.

குர்பான் இறைச்சியை நாங்கள் (ஆரம்ப காலத்தில் 11, 12, 13 ஆகிய) மினாவுடைய மூன்று நாட்களுக்கு மேல் உண்ணாமலிருந்தோம். (பின்னர்) நபி(ஸல்) அவர்கள் உண்ணுங்கள். சேமித்தும் வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். நாங்கள் உண்ணவும் செய்தோம் சேமித்தும் வைத்துக் கொண்டோம்...(புகாரி).

குர்பான் கொடுக்க வசதியில்லாதவர்கள் ஹஜ்ஜுடைய நாட்களில் மூன்று நோன்புகளும் ஊர் திரும்பிய பின்னர் ஏழு நோன்புகளும் நோற்க வேண்டும்.

குர்பான் கொடுத்த பின்னர் தலைமுடியை எடுக்கவேண்டும். முடி எடுத்தவர் மனைவியுடன் இல்லறத்தில் ஈடுபடுவது தவிர இஹ்ராமினால் தடுக்கப்பட்ட அனைத்திலிருந்தும் விடுபட்டவர் ஆகிவிடுவார். தவாஃபுல் இஃபாழாவை முடித்து விட்டால் மனைவியுடன் இல்லறத்திலும் ஈடுபட்டுக் கொள்ளலாம்.

**தவாஃபுல் இஃபாழா:** தலைமுடி எடுத்த பின்னர் குளித்து மணம் பூசி வழமையான ஆடைகள் அணிந்து கொண்டு தவாஃபுல் இஃபாழா செய்வதற்காக மக்கா செல்ல வேண்டும். ஹஜ்ஜுத் தமத்துஃ செய்தவர்கள் தவாஃபுல் இஃபாழாவை முடித்துவிட்டு ஹஜ்ஜுக்கான சஃயும் செய்யவேண்டும். ஹஜ்ஜுக் கிரான், இஃப்ராத் செய்தவர்கள் தவாஃபுல் குதூமுக்குப் பின்னர் சயி செய்திருந்தால் தவாஃபுல் இஃபாழாவுக்குப் பின்னர் சயி செய்ய வேண்டியதில்லை.

தவாஃப், சயியை முடித்ததும் மினா சென்று 11 ஆம் இரவில் மினாவில் தங்குவது அவசியமாகும்.

**11 ஆம் நாள்:** இந்நாளின் ளுஹர் நேரம் வந்ததிலிருந்து சூரியன் மறைவதற்கு முன்னர் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என்று முறையாக மூன்று ஜம்ராக்களுக்கும் ஏழு கற்கள் எறியவேண்டும். முதலாவது ஜம்ராவில் கல்லெறிந்த பின்னர் வலது பக்கம் சற்று முன்னால் சென்று கிப்லாவை முன்னோக்கி துஆச் செய்வது சுன்னத்தாகும். இரண்டாவது ஜம்ராவில்

கல்லெறிந்த பின்னர் இடது பக்கம் சற்று முன்னால் சென்று கிப்லாவை முன்னோக்கி துஆச் செய்வது சுன்னத்தாகும். மூன்றாவது ஜம்ராவுக்கு கல் எறிந்ததற்குப் பின் துஆச் செய்வது சுன்னத்தல்ல.

**12 ஆம் நாள்**: இந்நாள் இரவிலும் மினாவில் தங்குவது அவசியமாகும். 11 ஆம் நாளைப் போன்றே மூன்று ஜம்ராக்களுக்கும் ளுஹர் தொழுகை நேரத்திற்குப் பின் கல் எறிய வேண்டும். 12 ஆம் நாளோடு ஹஜ்ஜுக் கடமையை முடித்து விட்டுச் செல்ல விரும்புபவர்கள் சூரியன் மறைவதற்கு முன் மினா எல்லையை விட்டும் வெளியேறி விட வேண்டும். 13 ஆம் நாளும் மினாவில் தங்க விரும்புபவர்கள் 13 ஆம் இரவும் மினாவில் தங்கிவிட்டு 13 ஆம் நாள் ளுஹர் நேரத்திற்குப் பிறகு மூன்று ஜம்ராக்களுக்கும் கல் எறிந்துவிட்டு மக்கா செல்ல வேண்டும். மினாவில் இருக்கும் 10, 11, 12 & 13 ஆகிய நாட்களில் நான்கு ரக்அத்துத் தொழுகைகளை இரண்டிரண்டு ரக்அத்துகளாகச் சுருக்கியே தொழ வேண்டும். மாதவிடாய், பிரசவ இரத்தம் ஏற்பட்ட பெண்கள் தவாஃப், தொழுகையைத் தவிர மற்ற எல்லா அமல்களையும் செய்யலாம். சுத்தமானதும் தவாஃபை நிறைவேற்ற வேண்டும்.

**தவாஃபுல் விதா**:

ஹஜ் கடமையை முடித்துவிட்டு வீடு திரும்புபவர்கள் கடைசியாகச் செய்யும் அமல் தவாஃபுல் விதாவாகும். தவாஃபுல் விதா என்பது கஅபத்துல்லாஹ்விலிருந்து விடைபெற்றுச் செல்லும் தவாஃபாகும். இதுவே ஹஜ் செய்பவரின் கடைசி அமலாகும். தவாஃபுல் இஃபாழவை முடித்த ஒருபெண் மாதவிடாய், பிரசவ இரத்தத்தின் காரணமாக தவாஃபுல் விதாவைச் செய்ய முடியாவிட்டால் அப்பெண்ணிற்கு மாத்திரம் தவாஃபுல் விதாவை விட அனுமதியுள்ளது. மற்ற எல்லா ஹாஜிகளும் தவாஃபுல் விதாவை கட்டாயம் நிறைவேற்றி ஆக வேண்டும். மக்காவிலுள்ள எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு கடைசியாக தவாஃபுல் விதாவைச் செய்யவேண்டும். தவாஃபுல் விதா முடிந்ததும் பயணத்தைத் தொடங்கவேண்டும். இத்துடன் ஹஜ் கடமை முடிவடைந்துவிடுகிறது.

சிலர் தவாஃபுல்விதா செய்துவிட்டு கல் எறிகின்றனர் இது முற்றிலும் தவறாகும். இப்படிக் கல் எறிபவர் மீண்டும் தவாஃபுல் விதாவைச் செய்யவேண்டும். இன்னும் சிலர் தவாஃபுல் விதாவை முடித்துவிட்டுச் செல்லும் போது கஅபத்துல்லாஹ்வை பார்த்துக் கொண்டே பின்னோக்கிச் செல்கின்றனர். இதுவும் தவறே ஆகும். இதுபோன்ற தவறுகளுக்கெல்லாம் முக்கியக் காரணம் சரியான மார்க்க அறிவு இல்லாததே காரணம். ஹஜ்ஜுச் செய்யும் சகோதர சகோதரிகளே! லட்சணக்கான பணங்களை செலவு செய்து கஷ்டங்கள் பல அனுபவித்து பலனில்லாமல் ஆகுவதை விட்டும் பாதுகாப்புப் பெற ஹஜ்ஜுக்குப் புறப்பப்படும் முன்பே ஹஜ் சம்பந்தமாகப் படித்து, படிக்கத் தெரியாவிட்டால் முறையாகப் படித்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து ஹஜ்ஜு செய்யுங்கள். அல்லாஹ் நமது ஹஜ்ஜை சரியான தூய்மையான முறையில் செய்து அதற்கான முழுப் பலனைப் பெறக்கூடிய நற்பாக்கியங்களைத் தந்தருள்வானாக! ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

**இஹ்ராம் அணிந்தவர் தவிர்க்க வேண்டியவை**:

1. முடியை வெட்டுவது அல்லது பிடுங்குவது, நகங்களை எடுப்பது.
2. மணம் பூசுதல்.
3. தரைப் பிராணிகளை வேட்டையாடுதல், கொல்வது.
4. இஹ்ராமிலும் இஹ்ராமல்லாத நிலையிலும் ஹரம் எல்லைக்குள் உள்ள மரம், செடிகளை வெட்டுவது.
5. தவறுதாலாக விடப்பட்ட (கண்டெடுக்கப்படும்) பொருள்களை எடுப்பது. (உரியவர்களிடம் ஒப்படைப்பதாக இருந்தால் எடுக்கலாம்).
6. திருமணம் செய்து கொள்வது, திருமணம் முடித்து வைப்பது, தனக்கோ அல்லது பிறருக்கோ பெண் பார்த்து முடிப்பது, மனைவியுடன் உடலுறவு கொள்வது, மனஇச்சையை ஏற்படுத்தும் பேச்சுக்களைப் பேசுவது

ஹஜ்ஜுடைய காலத்தில் உடலுறவு கொண்டு விட்டால் அவரது ஹஜ்ஜு நிறைவுபெறாது. அக்குற்றத்திற்குப் பரிகாரமாக ஒரு ஆட்டை அறுத்து குர்பான் கொடுப்பதுடன் மீண்டும் வரும் வருடங்களில் ஹஜ்ஜுச் செய்தாகவேண்டும்.

ஆண்கள் தலையை மறைப்பதும், தைத்த ஆடைகள் அணிவதும் கூடாது. பெண்கள் கையுறை அணிவதும் முகத்தை மூடுவதும் கூடாது.

தவிர்க்க வேண்டியவற்றில் எதையேனும் ஒன்றை அறியாமலோ, மறதியாகவோ, தூக்கத்திலோ செய்துவிட்டால் குற்றமில்லை.

அல்லாஹ் கூறுகிறான்: (உள்ளங்களில் உறுதி கொள்ளாமல்) தவறுதலாக ஒன்றை நீங்கள் செய்து விட்டீர்களானால் உங்கள் மீது குற்றமில்லை... **அல் குர்ஆன் 7:5.**

நிச்சயமாக அல்லாஹ் எனக்காக எனது மக்கள் தவறுதலாக அல்லது மறதியாகச் செய்தவற்றை மன்னித்து விட்டான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆபூஹுரைரா (ரலி), இப்னுமாஜா.

தவிர்க்க வேண்டியவற்றில் எதையேனும் ஒன்றை எவ்வித தேவையும் முறையான காரணமும் இல்லாமல் செய்வது குற்றமாகும். அப்படி செய்து விட்டதற்காக அவர் அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டும். அதாவது ஒரு ஆடு அறுத்து, குர்பான் கொடுத்து, அதன் இறைச்சியை அங்குள்ள ஏழைகளுக்கு வழங்கிட வேண்டும் அல்லது ஆறு ஏழைகளுக்கு உணவு வழங்கவேண்டும் அல்லது மூன்று நோன்பு வைக்க வேண்டும்.

தவிர்க்க வேண்டியவற்றில் எதையேனும் ஒன்றை நிர்பந்தமான சூழ்நிலையில் செய்தால் குற்றமாகாது. எனினும் அவரும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பரிகாரங்களில் ஒன்றைச் செய்யவேண்டும்.

**ஹஜ்ஜின் கடமைகள்:** 1. நிய்யத்தை சொல்வதுடன் இஹ்ராமிற்கான உடை அணிதல்.

2. அரஃபாவில் தங்குவது.

3. தவாஃபுல் இஃபாழாச் செய்வது.

4. ஸஃபா, மர்வாக்கிடையே ஹஜ்ஜுடைய ஸயீ செய்தல்.

**குறிப்பு:** இந்நான்கில் ஏதேனும் ஒன்றை விட்டுவிட்டால் ஹஜ் நிறைவு பெறாது.

**ஹஜ்ஜுடைய இரண்டாம் நிலைக் கடமைகள்:**

1. **எல்லையில்** நிய்யதை சொல்லி இஹ்ராமிற்கான உடை அணிதல்.

2. சூரியன் மறையும் வரை அரஃபாவில் தங்குதல்.

3. **10** ஆம் இரவு முஸ்தலிபாவில் தங்குதல்.

4. **10** ஆம் நாள் காலையில் பெரிய ஜம்ராவிற்கு 7 கற்களும், 11 & 12 ஆம் நாட்கள் மூன்று ஜம்ராக்களுக்கும் 7 கற்கள் எறிவது, 13 ஆம் நாள் மினாவில் தங்குபவர் 13 ஆம் நாளும் கல்லெறிய வேண்டும்.

5. ஆண்கள் முடியை சிறைப்பது அல்லது கத்தரித்துக் கொள்வது. பெண்கள் விரல் நுனி அளவிற்கு கத்தரித்துக் கொள்வது.

6. 11 & 12 ஆம் இரவுகளில் மினாவில் தங்குவது. (13 ஆம் நாள் விரும்பியவர் மினாவில் தங்கிக் கொள்ளலாம்)

(ஹஜ் செய்பவர்) தீய காரியங்களில் ஈடுபடாமலும், மனைவியுடன் இல்லறத்தில் ஈடுபடாமலும் யார் ஹஜ் செய்கிறாரோ அவர் அன்று பிறந்த பாலகன் போல திரும்புவார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். புகாரி

**பயண ஒழுங்குகள்:-** 3 தடவை அல்லாஹு அக்பர் என்று கூறிவிட்டு சுப்ஹானல்லதீ ஸக்கர லனா ஹாதா வமா குன்னா லஹு முக்ரினீன், வஇன்னா இலா ரப்பினா

லமுன்கலிபூன், அல்லாஹும்ம இன்னா நஸ்அலுக்க ஃபீ ஸஃபரினா ஹாதல் பிர்ர வத்தக்வா வமினல் அமலி மா தர்ழா, அல்லாஹும்ம ஹவ்வின் அலைனா ஸஃபரனா ஹாதா வத்வி அன்னா புஃதஹீ, அல்லாஹும்ம அன்தஸ் ஸாஹிபு ஃபிஸ்ஸஃபர் வல்கலீஃபது ஃபில் அஹ்ல், அல்லாஹும்ம இன்னீ அவூது பிக வஅதாயிஸ் ஸஃபர் வகஆபதில் மன்ழர் வசூயில் முன்கலபி ஃபில் மாலி வல்அஹ்ல்

**«سبحانَ الذى سخر لَنا هذَا وما كُنا لَه مقْرِنِين وإنا إِلَى ربنا لَمنقَلبونَ اللهم إنا نسـألُك فـى سفَرِنا هذَا الْبِر والتقْوى ومن الْعمل ما ترضـى اللهم هونْ علَينا سفَرنا هذَا واطْوِ عنا بعده اللهم أنت الصاحب فى السفَرِ والْخليفَةُ فى الأهـلِ اللهم إِنى أعوذُ بِك من وعثَاءِ السـفَر وكَآبـة الْمنظَر وسوءِ الْمنقَلَبِ فى الْمالِ والأهلِ».**

பொருள்: எங்களுக்கு இவ்வாகனத்தை வசப்படுத்தித் தந்த அல்லாஹ் தூயவன். இதற்கு நாங்கள் சக்தி பெற்றவர்களாக இருக்கவில்லை. நிச்சயம் நாங்கள் எங்களின் இறைவனிடம் திரும்பிச் செல்பவர்களாக இருக்கிறோம். இறைவா! நிச்சயம் நாங்கள் இப்பயணத்தில் நன்மையையும் (உன்னை) அஞ்சுவதையும் செயலில் நான் பொருந்திக் கொள்வதையும் உன்னிடம் வேண்டுகிறோம், இறைவா! ஏங்களின் இந்தப் பயணத்தை எளிதாக்கு. பயண தூரத்தை குறைவாக்கி விடு. இறைவா! நீயே இப்பயணத்தில் துணை. எங்களுக்குப் பகரம் எங்களின் வீட்டாருக்கும் துணை. இறைவா! நிச்சயம் நான் பயண கஷ்டங்கள், காணுமிடங்களின் சிரமங்கள், பொருள், குடும்பத்தில் கெட்ட சூழல் இவைகளை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பும்போது இதே துஆவுடன் "ஆயிபூன தாயிபூன ஆபிதூன லிரப்பினா ஹாமிதூன் என்று கூற வேண்டும்.

**« آيِبونَ تائبونَ عابِدونَ لربنا حامدونَ ».**

எங்களின் இறைவனை வணங்கியவர்களாக, புகழ்ந்தவர்களாக, தவ்பா செய்தவர்களாக திரும்பி வருகிறோம்.